ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

இதுவரை கூறப்பட்ட காரணங்களால் விடியற்காலத்திலெழுந்து, சரீரசுத்திசெய்து, தன் படுக்கையிலேயே உட்கார்ந்துகொண்டு ஈசுவரனை தியானித்து வேண்டிக்கொண்டு, அன்றன்றைக்குச்செய்யவேண்டிய இஹபரஸாதன்மான காரியங்களைப்பற்றி இதைச்செய்தால் என்ன கிடைக்கும் செய்யாவிடில் ஏது நேறும், இதைச்செய்வது நல்லதா? கெட்டதா? ஒருவாறு இம்மைப்பயனுக்கு ஸாதனமாயினும் பரலோகத்திற்கு விரோதப்படாமலிருக்கின்றதா? என்பதாதியாக பூர்வீகாசாரத்தையும் உணர்ந்து புத்திபூர்வகமாய் விசாரணை செய்து தீர்மானித்துக்கொள்ளவேண்டும். புருஷார்த்தம் நான்கினுள் ஏதேனுமொன்றுக்கு விரோதப்படுமாயின் அந்தக்காரியத்தைச்செய்ய நினைக்கவேகூடாது. நம்மால் செய்யப்படும் காரியம் புருஷார்த்தங்களுளொன்றுக்காவது இடையூறாக ஆகாமலிருக்கும்படி ஆலோசனைசெய்து செய்யப்படுவதுதான் புத்திசாலித்தனம். ஸ்ரீபகவான் ஸ்ரீராமமூர்த்தியும் சித்திரகூடத்தில் பரதனிடம் குசலப்பிரச்னம் செய்யும்போது "பின்னிரவில் எழுந்து புருஷார்த்தங்களுக்கு முரண்படாமல் செய்யவேண்டிய காரியத்தைப்பற்றி நன்றாய் ஆலோசிக்கிறாயா" என்று கேட்டிருப்பதை கவனித்தால் நம்முன்னோர்களது ஆசாரமிப்படியென்று தெரியவரும். தற்காலத்திய மேதாவிகளுக்குமிது விரோதப்படுவதல்ல. தற்போது பெரும்பாலும் பிராணிகள் அவரவர்களுக்காக மாத்திரமாவது பொதுஜன நன்மைக்காவது பாடுபடுகிறோமென்று முன்வருவார்களேயாகில் பரலோகமொன்று உண்டு, அதற்கு இங்கு செய்யப்பட்ட நல்லது கெட்டது தான் காரணமென்ற ஞாபகத்தோடு அவர்கள் பிரவர்த்திப்பதாகத் தெரியவில்லை. நம்முன்னோர்கள் விவாகாதி காரியங்களை பரலோகத்திற்குத் தான் இது முக்கிய ஸாதநமென்று கருதி அதற்குத் தக்கபடி தர்மப்பிரதானமாகவே அனுஷ்டித்து வந்தார்கள். தற்காலத்தியவர்களது பிரவிருத்தி அப்படிக் காணப்படவில்லை. ஆஸ்திகர்களொன்று பெயர் பெற்றவர்களும்பிரார்த்தனையென்று வியாஜத்தைச்சொல்லிக்கொண்டு நான்கு தினங்களில் செய்யவேண்டிய அக்காரியத்தை ஒரே தினத்தில் ஏதேனுமொரு தேவதா ஸன்னிதியிற் சென்று முடித்துவிட்டு வந்துவிடுகிறார்கள். நான்கு நாளில் நடத்துபவர்களும், காபி இட்டலி பலஹாரம் தின்னுவதிலேயே குறிவைக்கின்றார்களேயன்றி தர்மமென்பதைச் சிந்திப்பது கூடக்கிடையாது. அப்படிக்கில்லாமல் எல்லோரும் எல்லாதர்மகாரியங்களிலும் பிராசீன வழக்கத்தையே கையாண்டு சுகப்படுவார்களாக. சுபம். சுபம்.

பத்திராதிபர்.

15

ஆர்யதர்மம்.

விபவ-ஹூ மாசி-மீ உசவ

# தர்மத்திற்கு சிபார்சு இல்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும் லௌகிக காரியங்களை ஸாதித்துக் கொள்ள சிபார்சு செய்ய பந்துக்களோ, மற்றவர்களோ பலவாறாக சேர்ந்துகொள்ளுகின்றார்கள். தர்மகாரியம் என்று வந்தால் சிபார்சு செய்ய மனுஷ்யாள் கிடைப்பது அரிதாயிருக்கின்றது. தர்மப் பிரதானமாயிருந்த காலத்தில் எல்லோரும் தர்மகாரியத்தைப்பற்றியே சிபார்சு செய்தார்கள். அதனால் தர்மமே எங்கு மோங்கி நடைபெற்றது. தற்காலத்தில் சிபார்சு இல்லாததனால் தர்மம் நடைபெறுவதற்குத் தயங்குகின்றது. ஸகலப்பிராணிகளும் தாங்கள் இச்சித்தபடி நல்லபயனைப் பெறவேண்டுமானால் தர்மத்தையே தான் ஆசிரயிக்கவேண்டும். ஏனெனில் கர்மபந்தத்திலகப்பட்டவர்கள் கர்மாவுக்குத்தக்கபடி ஒரு சரீரத்தையடையவும், சிலகாலம் அதிலிருந்து அந்த சரீரத்தாலனுபவிக்கவேண்டிய பயனையனுபவித்தபின் அது முடிவடையுங்காலத்தில் வேறு சரீரமெடுக்கவும் வேண்டுமாம். ஒரு சரீரம் முடிந்தவுடனே வேறு சரீரமெடுக்காமலிருக்கமுடியாதோவெனில் முடியாதாம். மனுஷ்ய சரீரம்பெற்றவன் பசு பக்ஷி முதலிய சரீரங்களாலனுபவிக்கவேண்டியபாபப்பயனையும் தேவாதிசரீரங்களாலனுபவிக்கவேண்டியபுண்ணியப்பயனையனுபவிக்க முடியாதல்லவா? மனுஷ்யன் எப்பொழுதும்மனுஷ்யனாகவேதானிருப்பான், அவனொருபொழுதும் பசுபக்ஷியாதிகளின் சரீரத்தை அடையமாட்டானென்பது பொருந்தாது. அப்படியானால் மனுஷ்ய சரீரமெடுத்தவன் மனுஷ்யலோகமாகிய கர்மபூமியில் புண்ணியத்தைச்செய்தால் ஸ்வர்க்காதிலோகங்களில் தேவாதிரூபனாகசுகத்தையனுபவிக்கிறவனாகவும் புண்ணியத்தைச் செய்யாது பாபங்களைச் செய்வானாகில் நாகாதிகளில் துக்கத்தையனுபவிக்கின்றவனாகவுமாவான் என்பதாதியாக கர்மப்பயனை

போதிக்கின்ற சாஸ்திரம் பிரமாணமில்லாமல்போகும். போகட்டு மேயென்பதை ஆஸ்திகர்கள் அங்கீகரிக்கமாட்டார்கள். ஆகவே ஒரு சரீரம் முடிந்தவுடன் அதிற்செய்த புண்ணியபாபங்களின் பயனையனுபவிக்க லோகாந்தரம் செல்லவேவேண்டும். மனுஷ்ய லோகத்திலேயே சாசுவதமாயிருக்கமுடியாது. மனுஷ்யலோகத்தில் மனிதனாகப் பிறந்தவன் அவ்விடத்தில் வஸிக்கும் காலத்தைவிட அதிககாலந்தான் லோகாந்தரத்தில் வஸிக்கவேண்டியதாகும். அனேகவிடங்களிற்சென்று ஆங்காங்கு வஸிக்கவேண்டியவன் ஒருவிடத்தைவிட அதிககாலம் கஷ்டப்படும்படியானவிடத்திற்குப் போகஇஷ்டப்படமாட்டான். ஆனால் இங்கு கஷ்டப்பட்டாலும் அதிககாலம் சுகமாயிருக்கும்படியான தேசத்திற்குச் செல்லவேண்டுமென்றுதான் ஆசைப்படுவான். ஒரு க்ஷணத்தில் செய்த கெட்ட காரியத்தின் பயனை வருஷக்கணக்காக இருந்து அனுபவிக்கநேருவதை ஜயிலிலடைபட்டவர் மூலமாக எல்லோரும் தெரிந்து கொண்டிருக்கின்றார்கள். அதுபோலவே கர்மபூமியாகிய நமது பாதகண்டத்தில் ஸ்வல்பகாலமாவதுபாபத்தைச்செய்துவிட்டால் யுகக்கணக்காகவும் அனேக ஜன்மக்கணக்காகவும் கஷ்டப்படவேண்டியதாகவரும் அதனால் கர்மபூமியில் கர்மாதிகாரம்பெற்றவன் கிஞ்சித்தேனும் பாபத்தைச்செய்யக் கனவிலும் நினைக்கக்கூடாது ஆனால் பலவிதமான புண்ணியங்களைச்செய்து ஸ்வர்க்காதிலோகம் போகத்தான் பிரயத்தனப்பட வேண்டும். இங்குள்ள அற்பசுகாபாஸங்களை அனுபவிக்கஆசைப்படக்கூடாது. அன்றியும் வேலை செய்புமிடத்திற்கு வந்தவன் போகங்களையனுபவிக்க இச்சிக்கப்படாது. அப்படி இச்சித்தால் வேலை நடக்காது. போகமும் புஜித்ததாக ஆகாது.

ஆகையால் வேலைசெய்ய வந்தவிடத்தில் தற்செயலாய் ஏதாவது அனுபவிக்கக் கிடைத்தால் அனுபவிக்கட்டும். அதுவும் மேலே ஸுகப்படப்போகுமிடத்திற்குக் கெடுதலாகக் குறிப்பிடப்பட்டால் அதையனுபவிக்கவே கூடாது. உதாரணமாக வயல்களில் தான்யாதிகளின் அருவடைக்காகக் களத்திற்குச் சென்றவன் அவ்விடத்திற்குறிய கார்யங்களைப்பார்க்காமல் இட்டலிகாபி போட்டு சாப்பிட்டுக்கொண்டிருப்பானாகில் அருவடைக்காரியம் ஒழுங்காய் நடக்குமா? அங்கு ஒன்றும் கிடைக்காமல் கஷ்டப்பட்டாலும் அந்தக்காரியத்தை ஒழுங்காய்ப் பார்த்துச் செய்து

விட்டு வீட்டிற்கு வந்துவிட்டால் அந்தப்பயனை நீண்டகாலம் வைத்துக்கொண்டு ஸுகப்படலாம். களத்தில் வேலைக்காகத் தாமதிக்கவேண்டிய காலமோ மிகக்குறைந்தது. வீட்டில் அதின் பயனை அனுபவிக்கவேண்டிய காலம் அதிகமாயுள்ளது. அதிக காலம் ஸுகமாயிருக்கவேண்டிய இடத்திற்குப் போவதற்குரிய காரியங்களைத்தான் வேலைசெய்யுமிடத்தில் செய்யவேணும். வீண் போதும் போக்கக்கூடாது, வேறு காரியத்தையும் பார்க்கக் கூடாது. அதுபோல் கர்மபூமியாகிய மனுஷ்யலோகத்தில் வஸிக்கக்கூடிய காலமோ உயர்ந்தால் நூறுவருஷம், அதற்குமுயர்ந்தால் சோதிடசாஸ்திரம் கூறியபடி நூற்றிருபதுவருஷம். வைத்திய சாஸ்திரம் ரஸாயனப்பிரகரணத்திலும், சோதிடசாஸ்திரம் அமிதாயுஸ் (அளவற்ற ஆயுஸ்) ஸைக் கூறுமிடத்திலும் கூறியபடி பார்த்தால் ஆயிரவருஷக்கணக்காக இருக்கட்டும். இவைகளைவிட அவ்வளவு வருஷங்களில் கர்மபூமியிற்செய்த புண்ணியப்பயன்களையனுபவிக்கவேண்டி ஸ்வர்க்காதிலோகங்களில் வஸிக்கவேண்டிய காலம் அதிகந்தான். उषित्वा शाश्वतीस्समाः "பல்லாயிரம் வருஷக்கணக்காக சாசுவதமாய் வஸித்து" என்று கீதாசார்யனும் கூறியிருக்கின்றார். ஆகையால் ஸ்வல்பகாலம் வஸிக்கவேண்டிய வேலை செய்யுமிடமான இப்பாரதபூமியில் மானிடப்பிறவியையடைந்த பாக்கியவான்கள் காலத்தை வீணாகக் கழித்துவிடாமலும், இங்குள்ள சிற்றின்பங்களையனுபவிக்க மனதைச்செலுத்திவிடாமலும், ஒன்றுங்கிடைக்காமல் கஷ்டப்பட்டாலும் படுவோம். நீண்டகாலமாக சாசுவதஸுகத்தைப் பெறவேண்டிய இடம் போவதற்குரிய வேலைகளையே செய்வோம் என்ற உறுதியுடன் இருந்து இவ்விடத்திற் செய்யவேண்டியதாக சாஸ்திரங்களில் குறிக்கப்பட்ட வர்ணாசிரமதர்மங்களையே செய்யவேண்டும். இங்கு செய்யவேண்டியது, செய்யவேண்டாதது இன்னென்னது என்ற வியவஸ்தைக்கு சாஸ்திரந்தான் பிரமாணமென்று கீதையில்

**तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।**

என்ற வசனத்தால் ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றார். அப்படியிருக்க சிலர் சாஸ்திரங்களில் நிஷேதிக்கப்பட்டிருக்கின்ற தீண்டாமையொழித்தல், விதவாவிவாஹம், ருதுமதீவிவாகம்முதலிய லோகாந்தரம் செல்லுவதற்கு முக்கிய இடையூறான பல லௌகிகவிஷயங்

களை ஒன்றும்தெரியாத சிறுவர்களிடம் சிற்சிலலௌகிகச்சிற்றின்
பங்களைப்பயனைக்காட்டி உபதேசித்து அவர்களது மனதைக்
கலக்கிவிடுகின்றார்கள். அதில் நமது சிறுவர்களுடைய மனம்
கலங்காமலிருக்கும்படி பெற்றோரும் ஆஸ்திகரான மற்றோரும்
நமது சாஸ்திரங்களின் உண்மைப்பொருளை விளக்கிக்காட்டி வர்
ணாச்ரமதர்மங்களை ஸரிவர அனுஷ்டித்து லௌகிகப்பயன்களான
உத்தியோகமோ பிரஸித்திக்காகவுள்ள பட்டங்களோ மற்ற எவை
களாகிலும் அவைகளில் மனதைச்செலுத்தாமல் உருகியாயிருந்து
பரமேச்வரனது கட்டளைக்குக்கீழ்ப்படிந்து அவரது கோபத்திற்கு
ஆளாகாமல் பிரஸாதத்திற்குப் பாத்திரமாகி மேன்மேலும் ஸுகப்
படும்படி உபதேசித்து தர்மத்திற்கு சிபார்சுசெய்வார்களாக.

ப—ர்.

---

# பௌத்தமத நிரூபணம்.

ஆரியர்காள் !

சென்றவாரத்தில் நாஸ்திகர்களின் மதத்தை நிரூபித்துக்
கண்டித்தோம். இனி பௌத்தமதத்தை நிரூபிக்கத் தொடங்கு
வாம். புத்ததேவர் பௌத்தமதத்தை இயற்றியவர், புத்ததேவர்
பகவானுடைய அவதாரமென்பது பாகவதம் முதலிய புராணங்
களில் பிரஸித்தம்; இவர் எளியோர்களுக்கும், திக்கற்றவர்களுக்
கும் நீதிமார்க்கத்தை உபதேசித்தவர்; தாம் சொல்வது ஸுலப
மாய் யாவருமறியவேண்டுமென்ற விருப்பத்தினால் ஸம்ஸ்கிருத
பாஷையையும் தள்ளிவிட்டு ஜநங்களின் பாஷையில் பேசினவர்.
இவர் ஸ்ரீராகவன், ஸ்ரீ கிருஷ்ணன் இவர்கள்போல் ஸிம்ஹாஸன
மேறி நீதிவழுவாமல் இராஜ்யபரிபாலனம் செய்தவர்; தாழ்ந்தவர்
களுடனும் கலந்து உபதேசம் செய்வதற்காகவே ஸிம்ஹாஸனத்
தை வெறுத்த தீரபுருஷர்; முன் அவதரித்த கிருஷ்ணபரமாத்
மாவே தாம் உபதேசித்த பரமார்த்தங்களை அனுஷ்டிக்கும் வழி
யையனுஷ்டானமுகமாக நிதர்சனப்படுத்துவதற்காகவே புத்த
தேவராகத் தோன்றினார் என்றுதான் நம்பவேண்டும். அவர்
செய்த பெருங்காரியமும், அவரது ஆசாரமும் அதிக உத்தம
மானதே; அவரிடம் அணுவளவாவது துர்குணங்கள் கிடை

யாது; அவர் பரிசுத்தரும், மகிமைவாய்ந்தவருந்தான்; அவருடைய உபதேசமொழிகளிலும் தோஷங்களொன்றும் சொல்ல முடியாது; ஆனல் அவருடைய கார்யத்தில் ஒரு குறைவுமாத்திரம் இருந்தது. அதனுலேயேதானவரிடம் தற்காலத்தியவர்களுக்கு மதிப்புக்குறைவு ஏற்பட்டுவிட்டது. அதாவது அவருடைய உயர்ந்த உபதேசங்களனைத்தும் அவருடைய சிஷ்யர்களால் நன்ருய் நிர்வஹிக்கமுடியாமல் போனதுதாதிருஷ்டந்தானதற்குக் காரணம். அன்றியும் அவருடைய சிஷ்யர்களனைவரும் கல்வி ஞானமற்ற அநாகரீகஜாதியர்கள், ஆதிகாலத்தில் இஜ்ஜாதியர்களும் பலவகை பயங்கரமான பூஜைமுதலிய காரியங்களையனுஷ்டித்துக்கொண்டு ஆர்யர்களுடன் கலந்து உறவாடி நின்றிருந்தார்கள். கொஞ்சகாலம்வரையில ஆஸ்திகவைதிகமதத்தையும், ஆர்யகாகரீகத்தையும் அவலம்பித்தவர்கள்போற்ருேன்றினும் சில நூற்ருண்டு கழிந்தவுடன் மூடபக்தியால் தாம் அனுஷ்டித்துவந்த ஆசாரத்தைப் பாதகண்டமனைத்தும் பாவச்செய்வதிலும், ஆர்யதர்மத்தை நாசம்செய்வதிலும் ஊக்கங்கொண்டனர். அவர்களுடைய முன்னேர்கள் வழக்கமாய் வணங்கிவந்த பாம்பு, பூதங்கள், சைத்யம் இவையனைத்தையும் ஆர்யஜனஸமூகத்திலும் கொண்டுவந்துவிடவே பாதகண்டம்முழுவதும் நாஸ்திகப்பிண்டமாய்விட்டது. அக்காலத்தில் அரசுபுரிந்துவந்த அனேக அரசர்களையும் இவர்கள் ஆபிசாரம் முதலிய காரியங்களால் பயமுறுத்தி தமது மதத்தில் இழுத்துக்கொண்டனர். இவர்களின் மாயவலையில் சிக்கிக்கொள்ளாதவர்கள் அக்காலத்திலொருவரும் இருக்கமாட்டார்கள். பிறகு தமது குருவாகிய புத்ததேவருடைய உபதேசமொழிகளுக்கும் அர்த்தம் விபரீதமாகச் சொல்லத் தலைப்பட்டார்கள், இவர்கள் புசிப்பது புலாலாகையால் அம்மாமிசத்திற்காக அனேக ஜீவஜந்துக்களை அடிக்கடி வதம்செய்வது வழக்கம். இதைக்கண்டு கருணுஸாகாராகிய புத்ததேவர் "பிராணிஹிம்ஸை கூடாது" என்று சாஸ்திரஸித்த அர்த்தத்தையே அவர்களுக்குப் பிரஸங்கித்தார். அதைக்கேட்ட அந்த அறிவற்ற சீடர்கள் வேதங்களில் மிகப்பரிசுத்தமென்று புகழ்ந்தோதப்பட்ட யக்ஞங்களையும் நிந்தித்தார்கள். அக்காலத்தில் யக்ஞங்கள் அதிகமாக அனுஷ்டிக்கப்பட்டுவந்தன. ஒவ்வொரு வீட்டிலும் அக்நிஹோத்திராக்நி ஜ்வலித்துக்கொண்டிருக்கும். அவ்வளவு யக்ஞங்களும்

அடியோடு அழிந்துபோவதற்கு இவர்களின் திருவுபதேசந்தான் முதற்காரணம். இரண்டாவதுதான் ஜனங்களின் அசிரத்தையென்பது. இப்படி பௌத்தர்களின் பிரஸங்கமகிமையால் யக்ஞங்களும் மற்றுமுள்ள வைதிககார்யங்களும் அடியோடு அற்றுவிடவே அந்த யக்ஞங்கள் நடந்தேறிய யக்ஞசாலைகளில் அனேக பிரம்மாண்டமான கோவில்களையும் கட்டி ஸ்தாபித்துவிட்டனர். இப்பரதகண்டத்தில் விக்ரஹாராதனை விருத்தியடைவதற்கு பௌத்தர்களேதான் காரணமென்பது நிச்சயம். இவ்விஷயம் 'தற்போதுள்ள தேவாலயங்களில் பிரகாசித்துவரும் "ஸ்தூபி" முதலிய பௌத்த அடையாளங்களை உற்றுநோக்கினவர்களுக்கு நன்கு புலப்படும். இதனால் விக்ரஹாராதனம் என்பது பௌத்த மதஸித்தமாகையால் நாமனுஷ்டிப்பது தவறென்று என்னுடைய அபிப்பிராயமன்று. விக்ரஹாராதனம் சாஸ்திரீயமாயினும் அதை அதிகமாக விருத்திசெய்ததற்கு பௌத்தமதமேதான் முக்கிய காரணமென்பது தான்கொண்ட கருத்தாகும். ஆதலால் புத்தரிடத்திலும் அவரது உபதேசங்களிலும் குற்றமொன்றுமில்லை. அவருடைய சிஷ்யர்களின் புத்திதோஷத்தாலேயே அவைகள் தோஷமுள்ளவைபோல் பிரகாசித்தன. இவ்வித ஸந்தர்ப்பத்தில் இவர்களின் மதத்தைக் கண்டித்து வைதிகமதத்தை நிலைநிறுத்துவதற்காக "தர்மம் தாழும் பொழுதெல்லாம் நானவதரிப்பேன்" என்று திருவாக்களித்த ஸர்வேசுவரனே! அனேக மஹான்களாக அவதரித்துவந்தார். பௌத்தமதத்தை ஒழிப்பதற்காக அவதரித்தவர்களுக்குள் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளே முதன்மையானவர், இவர்களுடைய வாழ்நாளெல்லாம் பௌத்தமதத்தை ஜயித்து பரதகண்டத்தைப் புராதன பரிசுத்தநிலைக்குக் கொண்டுவருவதிலேயே நோக்கமுள்ளவைகளாகவிருந்தன. இப்போதும் இவர்கள் செய்த அவதாரகாரியங்களனைத்தும் நடந்துகொண்டே வருகின்றன. ஸ்ரீ பகவத்பாதாளுடைய அத்வைத வேதாந்தஸாரத்துக்கும், பௌத்தமதயதார்த்தஸாரத்துக்கும் அதிக வித்தியாஸமில்லை. அனேகவிடங்களில் ஸ்ரீ பகவத்பாதாள் யுத்தக்களத்தில் சத்துருக்களின் வீரச்செயல்களை மெச்சிப்புகழ்ந்துபேசும் க்ஷத்திரியராஜகுமாரன்போல் புத்ததேவரின் ஸித்தாந்தத்தைத் தமது அத்வைதமதத்துக்கு நெருங்கினது என்று புகழ்ந்திருக்கிறார். புத்தபகவான் சொல்லியவற்றின் உண்மையை அவரது

சிஷ்யர்கள் நன்குணராமல் கேவல நாஸ்திகர்களானர்களென்றும் அனேகவிடங்களில் நிரூபித்துள்ளார். இவற்றால் பௌத்தமதம் புத்ததேவரின் சிஷ்யர்களால் நீசஸ்திதியையடைந்தது என்று ஸித்தித்தது. இதுவரையில் புத்தமதவாலாற்றில் சிலவற்றை மாத்திரம் குறிப்பிட்டேன். இனி அவர்களின் ஸித்தாந்தத்தை எவ்விதம் என்று பராமர்சம் பண்ணுவோம். சுபம்.

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்.

---

## பிராம்மணமஹாஸபை, கல்லிடைக்குறிச்சி. திருநெல்வேலிஜில்லா.

இச்சபையின் இரண்டாவதுகூட்டம் 11—2—29 திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு ஷை யூர் ஸ்ரீவராகபுரத்தெருவிலிருக்கும் கீர்வாண வாக்பரிபாலினீ ஸபையில், ஷையூர் ஸம்ஸ்கிருத காலேஜ் ப்ரின்ஸ்பல் பிரும்மஸ்ரீ, அ. சங்கரசாஸ்திரிகளவர்களின் அக்ராஸனத்தின்கீழ்நடைபெற்றது. அச்சமயம் திருநெல்வேலியிலிருந்து விஜயஞ் செய்தவர்களான பிரும்மஸ்ரீ மஹோபதேசக ராஜவல்லப சாஸ்திரிகள் அவர்களாலும், ஹைகோர்ட்டு வக்கீல் பிரும்மஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களாலும் விவாஹமசோதா, ஸம்ஸ்கிருத வித்யாப்யாஸம், ப்ராம்மண ஸமாஜம், என்ற விஷயங்கள் மிகவிரிவாயும் உருக்கமாயும் பலபிரமாணங்களுடனும், உபன்யஸிக்கப்பட்டன.

இதன் ஸாரம் பின்வருமாறு:—

உலகத்தில் பிர்ம்மகுலத்தில் ஜனிப்பதற்கு பூர்வஜன்மபுண்யங்களே காரணம். இந்த ஜன்மாவையடைந்தவன் மனு முதலானவர்களால் கூறப்பட்ட ஸ்வதர்மானுஷ்டானம் செய்வது உத்தமம். புருஷர்களுக்கு உபநயனம் முதல் ஸம்ஸ்காரமானதுபோல், ஸ்திரீகளுக்கு விவாஹம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு விரோதமாக தற்காலம் சிலர் விவாஹகாலத்தை மாற்றவேண்டுமென்றும் அதைச்சட்டமாகச் செய்தால் தான் எல்லோராலும் அனுஷ்டிக்கப்படுமென்றும் கூறுகிறார்கள். பால்யவிவாஹத்தால் விதவைகளின் எண்ணிக்கைகள் அதிகமாகிறதென்றும், சிசுக்களுக்கு வியாதியும் குறைந்த ஆயுளும் உண்டாகிறதென்றும், மனம்போன

படி கூறுகிறார்கள். ஆனால் இவைகள் காரணமாகாது, எனெனில் பல தேசத்தாருடைய பழக்கவழக்கங்களை அனுஷ்டிப்பதாலும், மனம் போனபடி ஆகாராதிகளை உட்கொள்வதாலுமே மேல் குறிப்பிட்டவைகளுக்குக் காரணஞ்சொல்லவேண்டுமேயொழிய பால்யவிவாஹத்தால் ஏற்படாது என்பது நிச்சயம். பிராம்மணர்கள் ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்க ஸம்ஸ்கிருதபாஷை அவசியம். இவ்விதம் பிராம்மண்யத்தை ஸம்ரக்ஷணை செய்வதற்கு ஆஸ்திக புத்தியும், ஸ்வதர்மானுஷ்டானங்களும் முக்யகாரணங்கள். இதன் ஸூக்ஷ்மங்களாகிய விவாஹம், கர்ப்பாதானம்இதுகளுக்குக்கெடுதலை உண்டுபண்ணிவிட்டால் ப்ராம்மண்யம் அடியோடு நசித்துவிடும் என்ற கொள்கையுடன் இந்த விவாஹஸம்யோகமசோதாக்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இச்சபையானது இம்மசோதாக்களைக் கண்டிக்கிறது. ஸ்திரீகள் ஸ்வாதந்திரியத்தையடைய பல ஸபைகளைக்கூட்டுகிறார்கள். அவ்விதம் கூட்டுவதையும்இச்சபையானது கண்டிக்கிறது. எனெனில் ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்திரியமேற்பட்டால் பல துன்பங்கள் நேரிடுகின்றன. இதை மிருகங்களுக்குள்ளேயிருக்கப்பட்ட சேஷ்டைகளால் அறிந்துகொள்ளலாம். ப்ராம்மண்யத்தை ஸம்ரக்ஷணை செய்வதற்கும், மற்ற பாஷைகளைக் கற்பதற்கும் ஸம்ஸ்கிருதபாஷை முக்யமாயிருப்பதால் ஒவ்வொரு அக்ரஹாரத்திலும் புதிதாய்ப் பாடசாலைகளை ஏற்படுத்துவதோடு ஏற்கனவே நடந்துவரும் பாடசாலைகளில் ஸம்ஸ்கிருதபாடங்களைக் கட்டாயம் கற்பிக்கவேண்டும். எல்லா பிராம்மணர்களும் ஸம்ஸ்கிருதவித்யாப்யாஸமே இஹபரங்களுக்கு ஸாதகமென்றெண்ணி தங்கள் குழந்தைகளையும் பாடசாலைகளுக்கு அனுப்புவதோடு தங்களாலியன்ற பொருளுதவியையும் செய்யவேண்டும். மாக்ஷிமைதங்கிய மஹாராணியார் மதவிஷயங்களில் பிரவேசிக்கிறதில்லை என்று வாக்களித்திருப்பதால் இன்னுமவர்கள் மதவிஷயங்களில் பிரவேசிக்க மாட்டார்கள். இதை நாம் அடிக்கடி மஹஜர்களில் ஞாபகப்படுத்தவேண்டும். இவ்விதமாய் பல பிரமாணங்களுடனும் கூறிய பிறகு, வந்தனோபசாரங்களுடன் இரவு 8-மணிக்கு ஸபை இனிது முடிந்தது என்று கல்லிடைக்குறிச்சி பிராமணமஹாஸபை காரியதரிசி ஸுப்ரமண்யசர்மா தெரிவிக்கிறார். சுபம். சுபம்.

---

## சு, குஞ்சுமேடு
## ஸ்ரீமத்வநவமி புண்யதினக் கொண்டாட்டம்.

சு. குஞ்சுமேடு ஸ்ரீ மாத்வஸபையின் ஆதிரவின்கீழ் ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமி, ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகோவில் ஸந்நிதானத்தில் 18-2-29-ல் ஸ்ரீமத்வநவமிபுண்யதினமஹோத்ஸவத்தை ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகோவில் டிரஸ்டி ஸ்ரீமான் ஒ ராகவேந்திராசாரியார், ஸ்ரீ மாத்வஸபை காரியதரிசி ஸ்ரீமான் த. கி. சேஷாசாரியார் இவ்விருவர்களால் சிலர் பொருளுதவியைக்கொண்டு வழக்கப்படி வெகு விமர்சையாக ஸ்ரீ மத்வவிஜயபாராயணம், பஞ்சாமிருதாபிஷேகம், அலங்காரபூஜை, அலங்காரமகாசந்தர்ப்பணைகள், பஜனை, உபந்நியாஸம், வீதி ஊர்வலம், இத்யாதிவைபவங்களுடன் மிக்க சிறப்பாய் நடத்தப்பட்டது. மேற்படி ஸ்தலத்தில் இரவு 7மணிக்கு ஸ்ரீ மாத்வஸபையின் ஆதரவின்கீழ் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் உதவி போதகரும், ஸமீரஸமயஸீரீஸ் நூல்களின் ஆசிரியருமான பிரும்மஸ்ரீ எம். ராமராவ் அவர்களால் "ஸ்ரீமத்வாசாரியாரின் மகிமை" என்ற விஷயமாய் பற்பல அரியசுருதிஸ்மிருதிகளினின்றும், ஸ்ரீமத்வவிஜயத்தினின்றும் அநேக மேற்கோள்களை எடுத்துக் காட்டி, பண்டிதபாமராஞ்சகமாய் இனிய கன்னடபாஷையில் 3-மணி நேரம் மிக்க உருக்கமாகவும், அழகாகவும், விரிவாகவும் உபந்நியசிக்கப்பட்டது. ஆண், பெண் இருபாலரும் ஸ்ரீமத்வாசாரியாரின் அபாரமஹிமையில் ஈடுபட்டு ஆனந்த பாவசர்களாகி மந்திராக்ஷதை பிரஸாதம் வழங்கப்பட்டபின் தத்தமில்லமேகினர் என்று ஸ்ரீமாத்வஸபை காரியதரிசி எழுதுகிறார்.

---

## கிராதார்ஜுனீயமும் மஹாபாரதமும்.

மேற்கண்ட தலைப்பைக்கொண்ட ஓர் உபன்யாஸம் கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் ஸம்ஸ்கிருத ஸமாஜத்தின் ஆதரவில் ஸ்ரீமான் D. A. நரஸிம்ம பந்துலு M.A., L.T., அவர்களின் தலைமையில் டவுன் ஹைஸ்கூல் உதவி ஆசிரியர், ஸ்ரீமான் M. ராமராவ் அவர்களால் 14—2—29ல் ஆங்கிலத்தில் செய்யப்பட்டது உபன்யாஸச் சுருக்கம் பின்வருமாறு:—

கிராதார்ஜுனீயம் என்ற காவ்யம் பஞ்சமஹாகாவ்யங்களில் ஒன்று. வீரரஸத்தையே பிரதானமாகக்கொண்டது. கிராதரூபியான பரமசிவனும் மத்யமபாண்டவனான அர்ஜுனனும் தான் கதாநாயகர்கள். 18 ஸர்க்கங்கள் கொண்டது. ஒவ்வொரு ஸர்க்கத்தின் கடைசி சுலோகத்திலும் लक्ष्मीः லக்ஷ்மீ: என்ற பதம் இணைக்கப்பட்டிருப்பதால் லக்ஷ்ம்யங்கம் என்றும்சொல்லப்படும். ஸ்ரீமன் மஹாபாரதம் வனபர்வத்தின் கதையே இதில் கூறப்படுகிறது. இந்த இயற்றியவர் பாரவி என்னும் கவி.

பாரவியின் தகப்பனார் ஸ்ரீதரர். தாயார் ஸுசீலை. கௌசிக கோத்திரத்தைச் சேர்ந்தவர். பிறப்பிடம் தாராநகர் அல்லது எல்லிச்பூர். மனோரதன் என்ற புத்திரனுமுண்டு. தாமோதரன் என்று வேறு பெயர். இவருடைய ஞானம் சூரியப் பிரகாசம் போல் தெளிவாய் இருந்ததின் நிமித்தம் பாரவி என்று அழைக்கப்பட்டார். (भा = ஒளி रविः = சூரியன்)

ஸிம்ஹவிஷ்ணு என்ற பல்லவ அரசனின் ஸம்ஸ்தான பண்டிதாகக்கடைசியில் அமர்ந்தார். துர்விநீதன் என்றஅரசகுமாரன் யமகம், சித்திரபந்தங்கள் இவைகளால் நிறைந்த 15ம் ஸர்க்கத்திற்கு வியாக்யானம் செய்தான். பாரவி கி. பி. ஆறும் நூற்றாண்டில் இருந்ததாகத் தெரியவருகிறது.

1 காளிதாஸன் உபமானத்தைக்கொடுப்பதில் வல்லவன். பாரவி ஆழ்ந்த அபிப்பிராயங்கொண்ட வார்த்தைகளை உபயோகிப்பதில் நிகரற்றவன் தண்டி என்னும் கவி லலிதமான பதங்களை ரசனம் செய்வான். மகாகவியிடம் மூன்று குணங்களும் உள்ளன. ஆகையால் மல்லிநாதன் இவனுடைய வாக்கைத் தேங்காய்க்கு ஒப்பாகக் கூறியிருக்கிறான்.2

கிராதார்ஜுனீயம் 2ம் ஸர்க்கம் 30ம் சுலோகத்தையொட்டிப் பல சரித்திரங்கள் கர்ணபரம்பரையாக நிலவி வருகின்றன. அவற்றுள் பின் கூறப்படுவதும் ஒன்றாகும்.

பாரவி சிறந்த பண்டிதன் என்று ஊரார் எல்லாரும் மெச்சுகையில் அவன் தகப்பனார் மாத்திரம் அவனை முழுமூடன் எனத்

---

१ उपमा कालिदासस्य भारवेरर्थगौरवम् ।
दण्डिनः पदलालित्यं माघे सन्ति त्रयो गुणाः ॥

२ नारिकेलफलसम्मितं वचो भारवेः……… ॥

திட்டிக்கொண்டிருந்தார். அதைச் சகியாத பாரவி ஒரு நாள் ஒருவரும் அறியாவண்ணம் தகப்பனாரின் படுக்கையறையிலுள்ள உத்தாரத்தின் மீது பெரும்பாராங்கல்லை வைத்துக்கொண்டு தகப்பனாரைக்கொல்ல ஸமயம் பார்த்திருந்தான். அச்சமயத்தில் மனைவியால் வினவப்பட்ட தகப்பனார் 'நம் புதல்வன் நிகரற்ற பண்டிதனே. அவன் அதிகத்தேர்ச்சி பெறவே நான் திட்டுகிறேன்' என்று சொல்வதைக்கேட்டான். பாரவி உடனே பச்சாத்தாபத்துடன் இறங்கி வந்து தகப்பனாரை வணங்கித் தான் செய்யத்துணிந்த காரியத்திற்கு என்ன பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது என வேண்டினன். தகப்பனார் 'மாமியார் வீட்டில் 6-மாதகாலம் வசித்திருப்பதே பிராயச்சித்தம்' என்றார் 1 மாமனார் வீட்டில் வாசஞ்செய்வது ஸ்வர்க்கதுல்யமாகவிருப்பினும் கணக்கிடக்கூடிய சிலநாட்களே இருக்கமுடியும். அதற்கு மேற்பட்டால் பாதாகைஷப் பிரயோகம் செய்யப்படும் என்று மைத்துனன் சுவற்றில் எழுதியதாக நமது நேயர்கள் அறிவார்கள். பாரவியும் அதற்கிணங்கி மாமியார் வீட்டில் வசித்து கௌரவமாக நடத்தப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு மாடு மேய்க்கும் தொழிலை ஏற்றுக்கொண்டான். மாடுகள் வயிறுறப் புல்லை மேய்கையில் பாரவி சுலோகங்களைக் கவனம் செய்துகொண்டே வந்தான். (கவி பாடிக்கொண்டே வந்தான்.)

(இக்கவிபாடல்களே பின்பு கிராதார்ஜுனீயம் என்னும் மஹா காவ்யமாயிற்று)பிரகிருதமான 2ஒருகாரியத்தையும் ஆலோசியாமல் திடீரென்று செய்யலாகாது. பகுத்தறிவின்மை கொடிய ஆபத்துக்களுக்கிடமாகும் என்ற அர்த்தமுள்ள (2–30) சுலோகத்தைக் கவனம் செய்துகொண்டிருக்கையில் பாரவியின் மனைவி தனக்குக்கொஞ்சம் பணம் தேவையென வேண்டவே அப்பாதி சுலோகத்தைக்கொடுத்து யாரிடமாவது அதை அடகுவைத்துப் பணத்தைப் பெறுமாறு சொன்னான். அவளும் ஓடோடி ஓர் பணக்காரவியாபாரியின் மனைவியிடம் அதை அடகுவைத்துப்

---

1 श्वशुरगृहनिवासः स्वर्गतुल्यो नराणाम्

* * * *

तदुपरि दिनमेकं पादरक्षाप्रयोगः ॥

२ सहसा विदधीत न क्रियां अविवेकः परमापदां पदम् ।

பணத்தைப்பெற்றாள். வியாபாரியின் மனைவி அப்பனையோலையை தன் படுக்கையினருகில் சுவற்றில் தொங்கவிட்டுப் படுத்து உறங்கினாள். அன்றையதினமே சுமார் 10, 15வருடங்களுக்குமுன்னரே வியாபாரநிமித்தம் திரைகடலோடித் திரவ்யம் தேடச்சென்றிருந்த அவளது கணவனான வியாபாரி வீடுவந்து பார்க்கையில் தன் மனைவி மற்றொரு புருஷனுடன்கூடிப் படுத்திருப்பதைக் கண்டான்; கோபக்கடலில் மூழ்கினான். இருவரையும் ஒரே வெட்டாக்கக் கத்தியை உயரத்தூக்குகையில் அதன் முனையால் சிதறுண்ட பனையேடு தொப்பென்று கீழே விழுந்தது. அதை வாசித்துப்பார்க்கையில் ஆலோசியாமல் எதையும் திடீரெனச் செய்யலாகாது என வரையப்பட்டிருந்தது. என் செய்வான் வியாபாரி! அவ்வுபதேசமொழிக்கிணங்க அவ்விருவர்களையும் எழுப்பி விசாரிக்கையில் அவ்வன்யபுருஷன் தன் அருமைப்புதல்வனே என அறிந்தான். இவன் ஊரைவிட்டுப் போகும்போது மனைவி கர்ப்பிணி என்று தெரியும். இவன் இல்லாதிருக்கையில் பிள்ளை பிறந்து இச்சமயத்தில் ஸுமார் 15-வயதுள்ளவனாயிருந்தான். மனைவி ஸகலத்தையும் தெரிவித்தாள். அச்சந்தோஷச் செய்தியையறிந்த வியாபாரி பனையோலையின் விருத்தாந்தத்தையும் அறிந்து ஆனந்தக்கடலில் மூழ்கிப் பாரவியை வரவழைத்துத்தன் அருமைப்புதல்வனையும் மனைவியையும் கொலையிலிருந்து தப்புவிக்கக் காரணமாயிருந்தமையால் சிறந்த ஸன்மானம் செய்தான். (ஸ்ரீமான் பாங்கர்க்கர் என்பவர் இச்சரிதத்தின் பின்பாதியைச் சற்று மாறுதலுடன் கூறியிருக்கிறார்.) இவ்வித மகிமைவாய்ந்த இச்சுலோகத்தைப் பாரவி 59 சுலோகங்களுள்ள 2-ம் ஸர்க்கத்தில் முன் 29, பின் 29 சுலோகங்களையமைத்து ஒரு மாலையின் கண்ணுள்ள நடுநாயகம்போல் அமைத்திருக்கிறான் என அறியவும். பாரதத்திற்கும் கிராதார்ஜுனீயத்திற்குமுள்ள சரித்திரமாறுபாடுகளும் அவைகளுக்குத் தகுந்த காரணங்களுடனும் இன்னும் பல விஷயங்களும் உபந்யாஸமூலமாய் வெளிவந்தன. ஓர் நிருபர்.

## ஆசாரியன் அவசியம்.

பக்திப்ரியர்களே !

பகவானிடம அன்புசெலுத்தும்படி முன்கூறினோம். அதன் பிறகு பகவத்ஸ்வரூபத்தையும் நிரூபித்துள்ளோம். இனி பக்தி

மார்க்கத்தை அவலம்பிக்கும்பக்தர்களுக்கு "ஆசாரியன் அவசியம் வேண்டுமா, வேண்டாமா" என்னும் விஷயத்தை விசாரிப்பாம்.

இவ்வுலகில் எவ்வித காரியங்களையும் நாமனுஷ்டித்துய்ய வேண்டுமாயின் பிறரின் உதவியும் அவசியம் வேண்டும். வேறொருவருடைய உதவியின்றி நாமாகமே நம்முடைய ஸுகத்திற்குக் காரணங்களை உணரவோ, அனுஷ்டிக்கவோ முடியாது. சாஸ்திரங்களில் ஒரு ஜீவன் வேறொரு ஜீவனிடமிருந்து தான் உபதேசம் பெறவேண்டுமென சொல்லியிருக்கின்றது. இவ்விதம் உதவி புரியும் ஜீவனே ஆசார்யனாவான். எவன் உதவியைப் பெருகிறானோ? அவன் தான் சிஷ்யனாவான். தமது புத்திவல்லமையால் ஸம்பாதிக்கப்பட்ட ஞானமுமனுஷ்டானமும் சிறிதேனும் பயன் படாது. "ஸங்கீதம், மிருதங்கம், ஆங்கிலம், தமிழ் முதலிய லௌகிக வித்யாஞானத்தையும் குருமுகமாகத் தான் அப்யஸிக்க வேண்டும். அத்தகைய ஞானத்தைப் புகட்டும் ஆசார்யனையும் சிஷ்யன் பூஜிக்கக் கடவான்" என்று மனு கூறியிருக்கிறார். ஆனால் அவ்வுபதேசம் பயன்படுவதற்கு ஆசார்யனுக்குபதேசிக்குந் திறமையும் சிஷ்யனுக்கு உபதேசம் பெறுவதற்கு சக்தியும் வேண்டும். விதை, வயல் இவை இரண்டும் நல்லதாய் இருந்தால்த் தான் பயிர் செழித்து வளருமென்பது உலகானுபவஸித்தமல்லவா? இவ்விதம் ஸத்குரு கிடைப்பதரிது. பலபேர்கள் தாம் அக்ஞானத்திலாழ்ந்திருந்தும் பிறருக்குபதேசம்செய்யப்புகுவார்கள். குருடன் குருடனுக்கு வழிகாட்டினாற்போல் இவ்விருவரும் அதோகதியைத்தான் அடைவார்கள். இவ்விதப் போலியாசிரியர் கிடைப்பது துர்லபமல்ல, ஆகவே ஸத்குருவின் உபதேசமே ஸபலமாகும். இதனால்த்தான் ஸத்குருவைத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு அவரிடம் உபதேசம் பெற்றுத்தான் ஸுகஸாதனங்களை அனுஷ்டிப்பது நலமென்று சுருதிகளில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. பக்திமார்க்கத்தையும் குருமுகமாக உபதேசம்பெற்று அனுஷ்டிக்க முயற்சிப்பதுதான் உசிதம். ஆசார்யனோ வேத சாஸ்திரங்களின் உண்மைகளை உணர்ந்தவனாயிருத்தல் வேண்டும். வேதங்களின் உண்மைப் பொருளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிவது தான் உண்மையான ஸத்குரு லக்ஷணமாகும்.

ஆயுள் முழுவதும் சாஸ்திரங்களில் சிரமப்பட்டுக்கசண்டின்றி சாஸ்திரஞானமேற்பட்டிருப்பினும் வேதங்களின் உண்மை ஞானமேற்பட்டுவிடாது. படிப்பினால் புத்திநுட்பமதிகரிக்குமேயன்றி ஸ்வாநுபவமேற்படுவது நிச்சயமில்லை. வேதாந்தவித்யை செவ்வையாய் விசாரிக்கவும், தர்க்கிக்கவும் சக்தியுள்ளவர்களும் நடத்

டத்தையில் கொஞ்சங்கூட காட்டாமலேயே காலத்தைக் கழிப்பது கண்டதில்லையா? உலகத்தில் சாஸ்திரங்களைப் படிப்பவர்கள் பெரும்பாலும் சாஸ்திரங்களின் இலக்கண இலக்கியங்களை சரியாய் நயனம் பண்ணுவதைப் பாராட்டுகிறார்கள். சொற்சுவையை கற்பித்துக்கொண்டு அதனை விஸ்தாரப்படுத்துவதிலேயே திருப்தி அடைகின்றனரேயன்றி பொருள் சுவையில் திருப்தி ஏற்படுவதில்லை. வேதங்களின் சப்தஜாலமோ அடர்ந்த மஹாரண்யம் போன்றது. அதில் சாதாரணமாய் யாவருக்கும் புத்திமயங்கும். அற்புதமாய் மொழிகளைத் தொடுப்பதும், அலங்காரத்துடன், பேசுவதும், வேதசாஸ்திரங்களை விஸ்தாரமாயும் நுட்பமாயும் ஆராய்ச்சி செய்வதும் புக்தியைத் தருமேயன்றி முக்தியை உண்டுபண்ணாது. உலகம் தங்களை அதிபண்டிதரென்று மெச்ச வேண்டுமென்கிற இச்சைகொண்டவர்களே ஆடம்பரத்தோடு உபதேசம் செய்யத்தலைப்படுவார்கள். உலகம் உய்யும்பொருட்டு அவதரித்த உண்மை ஆசிரியர்களோவெனின் உபதேசிக்கவேண்டியதை ஸம்க்ஷேபமாய் சொல்லிமுடிப்பார்கள். நடத்தையினாலேயே இவர்கள் சிஷ்யர்களையும் உண்மைவழியில் நடத்துவார்கள். இதனால்தான் ஸ்ரீபகவத்கீதையில் கண்ணபிரான்" நாம் வரிக்கும் ஆசிரியன் நன்னடத்தை நற்குணங்கள் இவைகளால் மாசற்றவனாக இருக்கவேண்டும் என உபதேசித்திருக்கிறார். இங்கு ஓர் ஆக்ஷேபம். உபதேசிப்பவனது குணங்களையும் நன்னடத்தையையும்பற்றி நாம் எதற்காக எதிர்பார்க்கவேண்டும் அவன் உபதேசிப்பது சரியா அல்லவா? என்று கவனித்தால் போதாதா என்று, இது சரியல்ல, கணிதம், சங்கீதம், சாகம் இவை போன்ற சாஸ்திரங்களை உபதேசிப்பவன் எப்படி இருந்தாலும் இருக்கலாம் ஏனெனின் இந்த சாஸ்திரங்களின் உண்மையை அறிய புத்தி நுட்பமே போதுமானது. பிரும்மஞானத்தை உபதேசிக்கும் ஆசிரியன் எத்தன்மையுள்ளவனென்று முதலில் அறிந்துகொண்டு பிறகு தான் அவன் உபதேசத்தை ஆதரிக்கவேண்டும். சிஷ்யனிடத்தில் இயற்கையாய் அமைந்துள்ள பிரும்மபாவத்தைத் தனது சக்திவிசேஷத்தால் தூண்டிப் பெருக்குவதே ஆசிரியனின் காரியம். ஆதலால் ஆசிரியன் மிகப்பரிசுத்தனும், ஆத்மநிஷ்டனும் இருக்கவேண்டும். மேலும் அவ்வாசிரியன் ஒருவிதப் பயனையும் கருதாது உபதேசிக்கவேண்டும். பணத்திற்காகவோ, புகழுக்காகவோ, உபதேசிக்காமல் சிஷ்யனிடம் கருணையாலே மட்டிலும் உபதேசிக்கவேண்டும் நமது மதத்தில் பகவானுக்கும் பரமாசார்யனுக்கும் சிறிதும் வித்யாஸமில்லை. பகவானிடத்தில் நாம் அன்பு செலுத்துவது போல் பரமகுருவிடத்திலும் ஸமமாகவே பக்திபண்ணவேண்டும்.

அவ்விதம் பக்திசெலுத்தும் சிஷ்யர்களுக்குத்தான் குருபதேசம் பலிக்கும். குருபக்தியின்றி நாம் ஒன்றையும் ஸாதித்துக் கொள்ளமுடியாது. சிஷ்யர்களுக்கு ஞானக்கண் கொடுப்பவன் குருவன்றோ? தகப்பனுக்கும், புத்திரனுக்கும், கணவனுக்கும், மனைவிக்கும் எவ்விதமுறையோ அம்முறையே சிஷ்யனுக்கும் குருவுக்குமாகும். இவ்வித குருசிஷ்யபாவம் உலகில் யாவருக்குமேற்படுவது ஸுலபமன்று. கடவுளை ப்ரத்யக்ஷமாய் தரிசித்த பரம குருவின் மகிமையை எடுத்துக்கூறுவது எப்படி முடியும்? இவ்விதம் உண்மை ஆசிரியர்கள் தற்போது இல்லாமல் போகவில்லை. இவர்கள் இல்லாவிடின் இவ்வுலகமும் நரகம் போலாகுமன்றோ? ஸ்ரீமத்பாகவதத்தில் கிருஷ்ணபரமாத்மா "என்னை யாவருக்கும் குருவென்றறிவாயாக" என்று அருளிச்செய்திருக்கிறார். இவர்கள் சிஷ்யர்களுக்குபதேசம் செய்யவேண்டுமென்பது கூடவில்லை. இவர்களுடைய பாதாரவிந்தஸேவையாலும் பவித்திரதரிசனத்தாலும் அவர்களின் ஸ்பர்சவிசேஷத்தாலும் இவர்களுடைய ஸங்கல்பத்தாலும் சிஷ்யர்களுக்கு ஞானமுதித்துவிடும். அதிநீசர்களும் இவர்களின் அருளால் சிறந்த யோகிகளாவார்கள். இவர்களின் அருளின்றி நாம் பகவானை தரிசிக்கமுடியாது. ஆதலால் இவர்களைத்தான் நாம் வாக்மன:காயங்களால் ஆராதிக்கவேண்டும். வேறுவிதமாக பகவானைக் காணமுயற்சித்தால் அம்முயற்சி "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது" என்றதுபோல்முடிந்துவிடுமேயன்றி ஸபலமாகாது. ஈசுவரனையும் குருவாகஉபாஸனம் பண்ணினாலன்றி தெய்வமாக உபாஸித்தால் அவ்வீசுவரன்பக்தனுக்கு பலனளிப்பதில்லை. யோகசாஸ்திரத்தில் ஈசுவரனுக்குலக்ஷணம் கூறுமிடத்து "ஆசிரியருக்கெல்லாம் எவர் ஆசிரியரோ அவரே ஈசுவரன்" எனறுஈசுவரனையும் குருவாக இருப்பதாகவே வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. சிலவிடங்களில் பரமேசுவரனைக் காட்டிலும் பரமகுருவுக்குக் கௌரவமதிகமென்றுகூடச்சொல்லியிருக்கிறது. ஆசார்யனின் அருளாலேயே ஈசுவராபராதத்தையும் விலக்கிக்கொள்ளலாம். ஈசிவராபராதத்தை அவ்வீசுவரனின் அருளாலும் விலக்கிவிடமுடியாது. நமது முன்னோர்கள் கிரந்தங்கள் எழுதும்போது எனது குருவின் அருளாலேயே இக்கிரந்தத்தை எழுதும் சக்தி எனக்கு உண்டாயிற்று பாண்டித்யத்தாலல்லவென்று அநேகவிடங்களில் கூறியுள்ளார்கள். ஆகையால் மகிமை வாய்ந்த குருவை அடுத்து பக்திமார்க்காஹஸ்யங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். அவருபதேசப்படி அனுஷ்டிக்கவும் வேண்டும். ஆகையால் ஆசார்யன் யாவருக்கும் அவசியமே.

சுபம். V. ஜகதீச்வரசாஸ்திரிகள்,

---